பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (1-4-2015) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-57 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

31. மக்களவை பொதுத் தேர்தல், 2014 மற்றும் ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்கான இடைத் தேர்தல் தினத்தன்று குறுந்தகவல் சேவை சார்ந்த வாக்கு கண்காணிப்பு அமைப்பு ஏற்படுத்தவும், வாக்காளர் குறித்த சேவை அமைப்பு ஏற்படுத்தவும், வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குறுந்தகவல் அனுப்புவதற்கும், மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகங்களுக்கு இணைய வழி சேவை வழங்குவதற்கும் மற்றும் கற்றை வழி இணைப்பினை 17,684 வாக்குச்சாவடிகளுக்கும் மற்றும் மாவட்டங்களில் அமைந்துள்ள 42 வாக்கு எண்ணும் மையங்களுக்கும் வழங்குவதற்கான பணிகளை திருவாளர்கள் பாரத் சஞ்சார் நிகாம் லிமிடெட் நிறுவனத்திற்கு வழங்கியது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையின் 1-7-2014 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 182-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

32. வைகை, பேச்சிப்பாறை, மேட்டூர், அமராவதி நீர்த்தேக்கங்கள் மற்றும் ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு ஆகியவற்றைத் தூர்வாருவதற்காக விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல், விரைவான சுற்றுச்சூழல் விளைவுகளை மதிப்பீட்டு ஆராய்வு செய்தல், ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் அவ்வொப்பந்தப்புள்ளி மதிப்பீடுகளில் உதவி செய்தல், திட்ட மேலாண்மை ஆலோசனை சேவைகள் மற்றும் திட்ட நிறைவுக்குப் பிந்தைய மதிப்பீட்டு ஆராய்வுப் பணிகள் ஆகியவற்றை நியமன அடிப்படையில் திருவாளர்கள் வாட்டர் மற்றும் பவர் கன்சல்டன்சி சர்வீசஸ் (WAPCOS) லிமிடெட்டுக்கு வழங்கியது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையின் 19-11-2014 ஆம் நாளிட்ட

அரசாணை (நிலை) எண் 278-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

33. சென்னை தேசிய விதைக் கழகம் லிமிடெட் என்ற இந்திய அரசு நிறுவனத்திடமிருந்து அகத்தி விதைகளை நேரடியாகக் கொள்முதல் செய்வதற்கு கால்நடை பராமரிப்பு மற்றும் கால்நடை பணிகள் இயக்குநருக்கு அனுமதி வழங்கியது குறித்து நிதி (சம்பளங்கள்)த் துறையின் 30-1-2015 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 27-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 43/1998) 22(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

34. 2013-2014 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு முன்னாள் படைவீரர்கள் கழகத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

20. 2014-2015 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான மானியக் கோரிக்கைகளும், விரிவான துணை மதிப்பீடுகளும். (தமிழ், ஆங்கிலம்)

21. 2014-2015 ஆம் ஆண்டு "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)

22. 2014-2015 ஆம் ஆண்டின் இறுதித் துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம், முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை. (தமிழ், ஆங்கிலம்)

23. 2015-2016 ஆம் ஆண்டில் உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி. (தமிழ், ஆங்கிலம்)

24. 2015-2016 ஆம் ஆண்டு "உடனடிச் செலவுக்கான" மானியக் கோரிக்கைகள் குறித்த அறிவிப்பு. (தமிழ், ஆங்கிலம்)